பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 07 வெள்ளிக்கிழமை 21.06.2024 கதிர் 226

# இந்திய – இலங்கை எரி சக்தித் திட்டங்கள் ரணில் – ஜெய்சங்கர் சந்திப்பில் ஆராய்வு

## அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தே அதிக கவனம்



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எரிசக்தித் துறை தொடர்பான கூட்டுத் திட்டங்களைதுரிதப்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஒற்றுமை ஒற்றுமை என்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் என்னதான்வாய்கிழியப்பேசினாலும் அவர்களுக்கு இடையில் ஒருபோதும் கருத்தொற்றுமையோ, தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான விடயத்தில் ஒற்றுமையோ வராது என்பது இந்திய அயலுறவுத்துறை அமைச்சருடனான நேற்றைய சந்திப்பில் மீண்டும் ஒரு தடவை நிரூபணமாகியுள்ளது.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று கூறப்படும் தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்களை ஒன்றாகச் சந்தித்துப் பேசினார்.

இந்தியப் பிரமர் நரேந்திர மோடியின் மூன்றாவது ஆட்சியில் மீண்டும் அயலுறவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஜெய்சங்கர், இந்தப் பதவிக் காலத்தில் தனது உத்தியோபூர்வ முதலாவது பயணமாக நேற்று கொழும்புக்கு வந்திருந்தார். இந்தப் பயணத்தில் அவர் அரசுத் தலைவர், ஆட்சித் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், பதவியிலிருந்து ☞ 2

## அமைச்சர் ஜெய்சங்கர் மகிந்தவுடனும் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும், இந்திய வெளிவிவகாரஅமைச்சர்ஜெய்சங்கருக்கும் இடையில் உத்தியோகபூர்வமான சந்திப்பு விஜயராமவில் உள்ள மகிந்தவின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, பொதுஜனபெரமுனவின் தேசியஅமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவும் பங்கேற்றிருந்தார்.

இந்தச் சந்திப் பின்போது இரு நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட விடயங்கள் உரையாடப்பட்டுள்ளன.

## எதிர்க்கட்சி தலைவருடனும் ஜெய்சங்கர் நேற்றுச் சந்திப்பு

இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளையும் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜி.எல். பீரிஸ், எரான் விக்கிரமரத்ன, நிரோசன் பெரேரா, பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய - இலங்கை உறவை வலுப்படுத்துவது குறித்தும் ஆதற்கு ஆதரவளிப்பது குறித்தும் இதன்போது ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய சந்திப்பு மிகவும்பயனுடையதாக அமைந்தது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

### தமிழர்கள் ஒருபோதும் இழக்க முடியாத

## சுயர்நிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய சமஸ்டி தீர்வுக்கு இந்தியா ஆதரவு தரவேண்டும்

### ஜெய்சங்கரிடம் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்கக் கூடியதான ஒரு சமஸ்டித் தீர்வுக்கு இந்தியா தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணிதெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றசந்திப்பின்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்கருத்துக்கள் எழுத்து மூலம் அதன் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனால் வழங்கப்பட்டது. அந்த ஆவணத்தின் முழுவடிவம் வருமாறு:

இலங்கைத்தீவில் தமிழருடையதேசத்தையும் அதன் இறைமையையும் சுயநிர்ணயஉரிமையையும் அங்கீகரிக்கும் சமஸ்டித் தீர்வை அடைந்துகொள்ள இந்தியா ஒத்துழைக்க வேண்டும்.

பிரித்தானிய காலணித்துவ ஆதிக்கத்தில் இருந்து இலங்கை விடுபட்டதன்பின்னரான75 வருட காலத்தில், இலங்கை அரசானது பொருளாதார ரீதியாகமட்டுமின்றிஅரசியல் ரீதியாகவும் பாதாளத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 75 வருடங்களாக இலங்கை கடைப்பிடித்துவரும் ☞ 2

## பிரதமர் - ஜெய்சங்கர் பேச்சு

இலங்கைக்கு உத்தியோகப்பூர்வ பயணமாக வந்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்..

இந்த சந்திப்பின் போது அபிவிருத்தி மற்றும் தொடர்புகளுக்கான முன்னெடுப்புகள் ஊடாக இந்தியாவின் வலுவான ஆதரவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

அத்தோடு இந்திய அபிவிருத்தி உதவிகள் மற்றும் ஆளுமை விருத்தி செயற்திட்டங்கள் ஊடாக இலங்கை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுமென ஜெய்சங்கர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாகவும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி தொடர்ந்தும் முன்னோக்கிச் ☞ 8

## 'உறுமய' காணி உறுதிகளுக்கான நடமாடும் சேவை மாத இறுதியில்

### ஜனாதிபதி அலுவலகம் தீர்மானம்

நாட்டில் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தும் வகையில், இம்மாதம் 26 - 30 ஆம் திகதி வரையில் நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவையொன்றை நடத்த ஜனாதிபதி அலுவலகம் தீர்மானித்துள்ளது.

அதன்படி காணி உறுதிகளை வழங்குவதற்கான சகலதுறைசார் அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்பி அவர்கள் ஊடாக விரைவாக காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதியின் ☞ 8

## தமிழ்க் கட்சித் தலைவர்களை ஒன்றாக சந்தித்தார் ஜெய்சங்கர்

இலங்கைக்கு வந்திருந்த இந்திய வெளிவிவகாரஅமைச்சர் ஜெய்சங்கருக்கும் தமிழ்க் கட்சிசிகளின் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றஉறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், விக்னேஸ்வரன், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சாணக்கியன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. ☞ 8

## மலையக இளைஞர் மாநாடு நடத்த அமைச்சரவை அனுமதி

### ஜூன் 22 கண்டியில் நடக்கும்

மலையக இளைஞர் மாநாட்டை நடத்துவதற்குஅமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும்ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெருந்தோட்ட ☞ 2

## 3 அபிவிருத்தித் திட்டங்கள் திறப்பு

இந்தியவெளிவிகார அமைச்சர் கலாநிதி. ஜெய்சங்கர்மற்றும்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதிமாளிகையில் இடம்பெற்றது. இதன்போது3அபிவிருத்தித் திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்தியாவில் புதிய ஆட்சிஅமைத்திருக்கும் நிலையில் அந்நாட்டு பிரதிநிதியொருவர் வெளிநாட்டுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயத்தை அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு மேற்கொண்டுள்ளர்.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகைத் தந்த இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் வரவேற்பளிக்கப்பட்டது.

அதனையடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சர்மற்றும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு ஆரம்பமானதோடு, இரு நாடுகளுக்கிடையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் இருதரப்பு பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

இதன்போது, இந்திய - இலங்கை உறவின்மைல்கல்லை அடையாளப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட 03அபிவிருத்தித் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய வெளிவிவகார ☞ 8

## 12 ஆண்டுகள் ரணிலின் ஆட்சி தொடர கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும்

### ஐ.தே.க. தவிசாளர் மீண்டும் சர்ச்சைக் கருத்து

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇன்னும் 12 ஆண்டுகளுக்கு இலங்கையை ஆளத்தக்க வகையில் மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வெளியேறிவிட்ட தலைவர், மலையகத் தலைவர்கள் என்று பலரையும் சந்தித்துப் பேசினார். அதில் ஒருதரப்பாக வடக்கு கிழக்கில் செயற்படும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்தார்.

கூட்டத்திற்கு சம்பந்தர் முதலில் வருவதாக இருந்தார். ஆனால் அவரால் வரமுடியவில்லை. உடல்நலக் குறைவு காரணமாகச் சொல்லப்பட்டது. சந்திப்பில் கிழக்கில் இருந்து கலந்துகொள்ளவிருந்த ஒரே தலைவர் சம்பந்தர் மட்டுமே. மற்றைய எல்லோருமே வடக்கைச் சேர்ந்த தலைவர்கள். வடக்கு கிழக்கு ஒற்றுமையின் பலவீனம் அங்கு அப்பட்டமாகத் தெரிந்தது. அதனால் கிழக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியனையும் சந்திப்பில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று இந்தியத் தூதரகத்திற்கு வலியுறுத்தப்பட்டது. நீண்ட முயற்சிகளின் பின்னர் சம்பந்தரின் இடத்திற்கு அவரும் அழைக்கப்பட்டார்.

கூட்டத்தில் இந்தியாவின் அபிவிருத்தித்திட்டங்களை, குறிப்பாக இலங்கை இந்தியா இடையிலான பாலத்தை வரவேற்று சிலாகித்துப் பேசியவர் சாணக்கியன் மட்டுமே. மற்றைய தலைவர்கள் எல்லோரும் ஏதோ ஜெய்சங்கரை இப்போதுதான் முதல் முதலாகப் பார்க்கிறார்கள் என்கிற வகையில் பழைய பல்லவியையே மீண்டும் மீண்டும் பாடினார்கள். 13, ஒற்றையாட்சி, அதிகாரப் பகிர்வு என்று அவர்கள் ஒப்புவித்தவற்றில் எந்தவொரு புதிய விடயமும் இல்லை.

சந்திப்பில் புதிதாகப் பேசப்பட்டது என்றால் அது பொது வேட்பாளர் விடயம் மட்டும்தான். தான் பொது வேட்பாளரை உறுதியாக ஆதரிக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். பொது வேட்பாளரை நிறுத்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் விளக்கினார். இந்த விடயத்தில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்று கூறி அதனைத் தெளிவுபடுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

இவர்களின் சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரம் அரை மணித்தியாலம் மட்டும்தான். மொத்த நேரமும் தங்களுக்குத்தான் என்று கருத்தினார்களோ என்னவோ தமிழ்த் தலைவர்கள் கிட்டத்தட்ட ஒதுக்கப்பட்ட நேரம் முழுவதும் தாங்களே முழங்கித் தள்ளிவிட்டார்கள். அதில் வழக்கம்போல மாவை சேனாதிராசா கொஞ்சம் அதிக நேரங்களை எடுத்துக்கொண்டார். ஜெய்சங்கருக்குத் தமிழ் விளங்கும் என்பதால் தலைவர்களில் பலருக்கும் தமது கருத்துக்களை மூன்று நான்கு நிமிடங்களுக்கு நீட்டி முழக்க வசதியாக இருந்தது. ஜெய்சங்கரின் கருத்தைக் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்று யாருக்கும் தோன்றியதாகத் தெரியவில்லை.

கடைசியில் நேரம் முடிவடைந்தபோது உங்கள் கருத்துக்களுக்கு நன்றி என்றளவில் கூறி ''நீங்கள் எழுந்து போனால் போதுமையா'' என்ற ரீதியில் அனுப்பி வைத்துவிட்டார் அமைச்சர். பழைய பல்லவியையே பாடும் இவர்கள் முன்னால் புதிதாகப் பாடத்தன்னிடம் என்ன இருக்கிறது என்று அவரும் நினைத்திருப்பாரோ என்னவோ, இவர்களே மொத்த நேரத்தையும் வி-ழுங்கிக் கொண்ட திருப்தியுடன் சந்திப்பை முடித்துக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் அவர் ஆச்சரியம் அடைந்த ஒரே ஒரு இடம், பொது வேட்பாளர் விவகாரம் பற்றிப் பேசப்பட்ட சமயம்தான். உண்மையிலேயே இதையெல்லாம் (பொதுவேட்பாளர்) விடயமாக எடுத்துத்தான் இங்கு வந்து பேசுகிறீர்களா, சும்மா பகடி விடாதீர்கள் என்கிற வகையில் அவரது 'ரியாக்சன்' இருந்தது என்று அறிய முடிந்தது. அதற்குமேல் சந்திப்பின் பயன் என்று ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பில் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடலில் இந்தவிடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

எரிசக்தி இணைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையின் மேம்பாடு, எல்.என்.ஜி.விநியோகம், இருநாடுகளுக்கு இடையே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எரிபொருள் விநியோகக் குழாய், எரிபொருள், எரிவாயு ஆய்வுத்திட்டங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகளை வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பால் உற்பத்தியை ஊக்குவிக்க, இந்திய அரசின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் செயல்திறன் மற்றும் உர உற்பத்தி தொடர்பான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

திருகோணமலையின் அபிவிருத்திக்காகவும், காங்கேசன் துறை துறைமுகத்தின் விரிவாக்கத்திற்காகவும் இந்திய அரசின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்திய அரசின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் யாழ். விமான நிலையம் மற்றும் கொழும்பு இரத்மலான விமான நிலையம் ஆகியவற்றின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலின் முதற்படியாக, இலங்கைக்கான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டைத்திட்டத்தை துரிதப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில், வெளியுறவுத் துறை அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, விவசாயம், தோட்டக்கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தேசிய பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட இந்திய தூதுக்குழுவினரும் கலந்துகொண்டனர்.

## 12 ஆண்டுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் இறையாண்மைக்கு அமையவே அரசமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க நாட்டை அடுத்த பன்னிரண்டு வருடங்களுக்கு நிர்வகிக்க முடியுமா என்று பொதுமக்களிடத்தில் வினவ வேண்டும். மக்கள் சரியென்று கூறும்பட்சத்தில் நாட்டை நிருவகிக்க முடியும்.

ஜனநாயகத்துக்கான சிறந்த அறிகுறியே அதுவாகும். இரண்டு கோடியே முப்பது இலட்சம் பொதுமக்களிடத்தில் அதுகுறித்து வினவி தீர்மானம் எடுப்பதில் தவறில்லை. அது மக்களின் தீர்ப்பு என்றார்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு 'நாம் 200'' என்ற விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும், அந்த தேசிய வேலைத்திட்டத்திற்குள் மலையக இளைஞர் மாநாடு ஒன்று ஜூன் 22ஆம் திகதி கண்டியில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களில் வாழும் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்படுவதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## சுயர்நிர்ணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைகளும், தீர்க்கப் படாமல் நீண்டு செல்லும் இனப் பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய இந்த வங்குரோத்து நிலைக்குக் காரணமாக அமைந்திருக்கிறது . எனவே, இந்நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக இருக்க வேண்டுமெனில், இந்த நாட்டின் கொள்கைகளிலும் ஒரு உண்மையான தீர்க்கமான மாற்றம் தேவைப் படுகின்றது.

இலங்கையில் இனப்பிரசினைக்கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் 'ஒற்றையாட்சி' அரசமைப்பாகும். குறிப்பாக 36 வருடங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசமைப்பில் 13ஆம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு முற்றுமுழுதாக நடைமுறையில் இருக்கும்போதே தமிழ்த் தேசம் மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது. அதேவேளையில் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் 13ஆம் திருத்தம் தற்போதும் முழுமையாக நடைமுறையிலுள்ளபோதும்கூட தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றிற்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை.

குறிப்பாக, 13ஆம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அரசியல் ரீதியாக, அன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் களச்சூழல் மேலும் மேலும் மோசமாகியே உள்ளது. போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக்காரணம் இந்த ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பேயாகும்.

அரசகட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும்வரையில், எந்தவொரு வழிமுறையூடாகவும் அர்த்தமுள்ள சுயாட்சியையும் அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாதவாறு இருப்பதனால், அந்த ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட 13ஆம் திருத்தச்சட்டம் அறிமுகப்படுப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே தமிழர் தரப்பு முழுமையாக அதனை நிராகரித்து வந்துள்ளது. இந்த 13ஆம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அதன் அதிகாரங்கள் குறித்து சிறிலங்காவின் மீயுயர் நீதிமன்றுகளில் ஏறத்தாழ 30 வழக்குகள் விசாரிக்கப்பட்டு அதன் தீர்ப்புகள் அனைத்தும், அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரைக்கும், அனைத்து அதிகாரங்களும் , கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசிடமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது,

அதிகார பகிர்வுக்கு எதிராகவே நீதிமன்றங்கள் தீர்ப்புகளை அளித்திருக்கிறன. இந்நிலையிலேயே, தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, 13ஆம் திருத்தசட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை இந்தியா கோரி வருகின்றது. ஆனால், 13ஆம் திருத்தத்தின் சரத்துகளின் அமுலாக்கம் குறித்து எப்போதெல்லாம் சிறிலங்காவின் மீயுயர்நீதிமன்றை நாடிய போதெல்லாம், அது மேற்குறிப்பிட்டவாறே தீர்ப்புகளை அளித்திருக்கிறது.

அரசமைப்பு குறித்தான பொருள்கோடல் செய்து இறுதி முடிவுகளை எடுக்கும் அதிஉயர் பீடமாக சிறிலங்காவின் உச்ச நீதிமன்று இருக்கின்றது. அந்த உச்ச நீதிமன்று 13ஆம் திருத்த அதிகாரங்கள் குறித்து இதுவரைகாலமும் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையிலும், 13ஆம் திருத்தமானது, சிறிலங்காவின் சட்டவரம்புகளின் பிரகாரம் 'முழுமையாக' அமுல்படுத்தப்பட்டே உள்ளது.

இலங்கையில் இனநல்லிணக்கத்தினை ஏற்படுத்தல் என்னும் பெயரில் புதிய அரசியல் யாப்பிற்கான வரைபை உருவாக்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 2016 மார்ச் ஆரம்பமாகி 2019 ஜனவரியில் நிறைவடைந்தது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு வரைபானது தற்போது இருப்பதனைவிடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப்புக்கான வரைபாகும். அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில், அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாது. இந்த காரணிகளின் அடிப்படையிலே எமது அமைப்பானது, 13ஆம் திருத்தினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவேனும் கருத்திலெடுக்க கூடாதெனும் நிலைப்பாட்டினை ஆரம்பம் முதல் உறுதியாகவுள்ளது.

அத்தோடு, இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய எந்தவொரு பேச்சும், நேர்மையானதாகவும் தீர்க்கமானதாகவும் இருக்கவேண்டுமெனில், அரசமைப்பு மூலம், நாட்டின் ஐக்கியத்தை பேணிக்கொள்ளும் அதேவேளை, ஒற்றையாட்சியைக்கடந்து சமஸ்;டி முறையை கருத்தில் எடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய முடியும் என்பதை சிங்கள தேசத்தின் தலைவர்கள், தமது மக்களுக்கு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்க வேண்டும் என்பதையும் எமது அமைப்பு வலியுறுத்தி நிற்கின்றது.

1985 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இந்தியாவின் ஆசீர்வாதத்தோடும் அனுசரணையோடும் நடந்த பேச்சுக்களில் தமிழர் தரப்பில் அனைவரும் இணைந்து ஒருமித்த குரலில் முன்வைத்த திம்புக்கோட்பாடுகள் தீர்வுக்கான அடிப்படைகளாக இருக்க வேணடுமென எமது அமைப்பு மிக திடமாக நம்புகிறது .

பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்துள்ள இலங்கை அரசானது, தனக்குரிய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்ய உலக நாடுகளில் தங்கியுள்ள நிலையில், வேறெந்த நாடுகளை விடவும் இந்தியாவிற்கு சிறிலங்கா மீதான பிடி மிகவும் வலிதானது. இக்கட்டான நிலையில் இருந்து சிறீலங்காவை மீட்பதற்காக தனது நடவடிக்கைகள் மூலம் சிங்கள மக்களின் மரியாதையும் இந்தியா வென்றிருக்கின்ற நிலை உருவாக்கியிருக்கிறது.

இந்நிலையில், ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதை இந்தியா ஏற்று, தமிழரின் அந்த நிலைப்பாட்டுக்கு உறுதுணையாக நிற்பதோடு, தமிழர் தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித்தீர்வுக்கானதன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு இந்தியாவை தீர்க்கமாக வேண்டிக்கொள்கிறது.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்தியா முன்னின்று நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

போரினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அரசினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தினை போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவும் இப்பிரதேச அபிவிருத்திக்கென சர்தேச நிதிஉதவியைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

ஐநா மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் ஒருவரை இலங்கையின் பெயர் குறித்து வடக்கு கிழக்கு நிலைமைகள் தொடர்பான அறிக்கையிடலுக்காக நியமிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்ம

அத்துடன் இலங்கையின் கடற்பரப்பினுள் எல்லதாண்டி நுழையும் இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளால் தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் இந்திய அரசு உடன்நடவடிக்கை எடுத்து தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கநடவடிக்கைஎடுக்கவேண்டுமெனவும் கோருகின்றோம்.

இறுதியாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இநிதியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திகொள்வதில் தமிழ்த் தேசமும் எமது அரசியல் இயக்கமும் எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்பதனையும் இங்கு மீளவும் வெளிப்படுத்திநிற்கின்றோம் - என்றுள்ளது.

# ஆளும் தரப்பு எம்மை சாகும்வரையான உண்ணாவிரதத்துக்குத் நகர்த்துகின்றது

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க செயலர் முகமது காமில்




(எஸ்.அஷ்ரப்கான்)

நியாயமான மற்றும் எங்களுக்கு வழங்குவதாக அரசால் வாக்குறுதியளிக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை நிவர்த்திக்குமாறு கோரி நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக் கழகங்களில்பணியாற்றும்ஊழியர்கள்கடந்த 50 நாள்களாகப் போராடிவரும் இன்றைய சூழலில் அரசும் சம்பந்தப்பட்ட நிருவாகிகளும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது எங்களை சாகும்வரையானஉண்ணாவிரதத்துக்குள்தள்ளஎத்தணிப்பது



போன்று உள்ளதாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமில் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 50 நாள்களாக தாங்களது போராட்டங்களை பல்வேறு வியூகங்களை வகுத்து போராடி வரும் நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் புதன்கிழமை சுழற்சி முறையான உண்ணாவிரத போராட்டத்தையும் சத்தியாக்கிரக போராட்டத்தையும் பல்கலைக்கழக நுழைவாயிலில் ஆரம்பித்துள்ளனர்.

சுழற்சி முறையான உண்ணாவிரதப் போராட்டத்தில் முதற்கட்டமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் மற்றும் எஸ். றிபாயுத்தீன், எம்.எச்.எம். நாஸார் ஆகியோர் குதித்துள்ளனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் முகமது காமில் –

நாங்கள் சொகுசு தேவைகளுக்காகப் போராடவில்லை. எங்களது போராட்டம் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமானகோரிக்கைக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஊழியர்களின் போராட்டம் காரணமாக பல்கலைக்கழகங்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. இதனால் மாணவர்களின் கல்விநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவைகள் தொடர்பில் அரசாங்கமோ அல்லது மாணவர்களோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு அவர்கள் கவலைப்பட்டிருந்தால் எங்களது நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் கருத்துக்களையாவது வெளியிட்டிருப்பர். ஊழியர்கள் போராடிவரும் சூழலில் குறித்த வேலைநிறுத்த போராட்டத்தின் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தாங்களுக்கு சாதகமான பதில் கிடைக்குமாக இருந்தால் உடனடியாக கடமைக்குத் திரும்பத் தயாராய் இருப்பதாகவும் இல்லையெனில் நாங்கள் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நோக்கியே நகரவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாகப் பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் மாணவர்களும் பணியாற்றும் எல்லா தரப்பு ஊழியர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் அதைவிட கவலைப்படக்கூடிய ஒன்றாக பல்கலைக்கழகங்களில் காணப்படும் உபகரணங்கள் மற்றும் சூழல் என்பன பராமரிப்பின்றி பழுதடையும் நிலையை எட்டுவதாகவும் இவை எல்லாவற்றியும் அரசு கருத்தில்கொண்டு உடன் தீர்வைத்தர முற்படவேண்டும் என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழினுட்ப உத்தியோகத்தர் ஏ.எல்.எம். பைறோஜி தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தின்போதும் சம்பள அதிகரிப்பை வழங்கக் கோரியும் தங்களது பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இங்கு ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பன போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.(05)




# வீரமுனை வரவேற்பு கோபுரத்திற்கான இடைக்காலத் தடை உத்தரவு நீடிப்பு..





(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேசத்தில் சட்டரீதியாக அனுமதி பெறாமல் வீரமுனை வரவேற்புக் கோபுரம் எனும் பெயரில் கோபுரம் ஒன்று அமைப்பதற்கு எதிராக இரண்டு நபர்களால் முறைப்பாடு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நௌபர் என்பவரால் மன்றிக்கு செய்யப்பட்ட அறிக்கையின் பிரகாரம் சனிக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் பிரதேசத்திற்குட்ப்பட்டதும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உட்பட்ட சம்மாந்துறை ஆண்டியடி சந்தி எனும் இடத்தில் வீரமுனைக்கு செல்லும் வீதியில் வீரமுனை பிரதேசவாசிகளால் வரவேற்பு கோபுரம் ஒன்று அமைப்பதற்க்கு அடிக்கல் நாட்டு விழாவினை நடாத்துவதனால் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில்இனக்கலவரம்ஒன்றுஏற்படுவதற்க்கு சாத்தியமுள்ளதாலும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் மற்றும் சமாதானகுலைவு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளதாலும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட கூடிய சாத்தியமுள்ளதாலும் இவ் நிகழ்வை நடத்துவது உசிதமானது அல்ல என்பதால் இந்த நிகழ்வை நடத்தாமல் நிறுத்துமாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், வீரமுனை கோவில் தலைவர் ராஜ கோபால் , கிராம உத்தியோகத்தர் பிரதீபன் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் கோபுரம் அமைப்பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக புதன்கிழமை சம்மாந்துறை பொலிஸாரால் மன்றிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த அறிக்கை தொடர்பான விசாரணையை மேற்கொண்ட போது எதிர்வரும் 27 ஆம் தி஗்ஹதிவரை தொடர்ந்து இடைக்கால தடையுத்தரவு நீடித்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (05)

# பாரம்பரிய கயிறு இழுத்தல் போட்டி புத்தளம் முள்ளிபுரத்தில் நடந்தது




*(எம் சியாஜ்)*

*ஹஜ் பெருநாளை முன்னிட்டு திங்கட்கிழமை முள்ளிபுரம் பிளக் பெயார் குழுவினரால் நடத்தப்பட்ட பாரம்பரிய கயிறு இழுத்தல் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து சிறப்பித்ததுடன் விசேட அதிதியாக முன்னாள் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதுர்தீன் மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் முள்ளிப்புரம் பிரதேசத்தின் இணைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.*

*பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்களின் வரவேற்பைப் பெற்ற இந்தப் போட்டி முள்ளிபுரம் பாடசாலை வளாகத்தில் நடை பெற்றது.*

*கயிறுழுத்தல் போட்டியில் புத்தளம் பிரதேசம் மட்டுமல்லாது மாவட்ட மட்டத்தில் பல அணி கள் கலந்துகொண்டமை குறிப்பி டத்தக்கது. (05)*

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அபிவிருத்தியும் அரசியல் தீர்வும்

**இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று கொழும்புக்கு வந்திருந்தார். இந்தியப் பிரதமர் மோடியின் மூன்றாவது பதவிக் காலத்திலும் அயலுறவுத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள அவர், முதல் பயணமாக இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இங்கு கிட்டத்தட்ட அனைத்துத் அரசியல் தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

**அரசுத் தலைவர் (ஜனாதிபதி), ஆட்சித் தலைவர் (பிரதமர்), எதிர்க் கட்சித் தலைவர், முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச, மலையகத் தலைவர்கள், வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் என்று பல தரப்பட்ட அரசியல் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்களில் இந்தியாவின் கொள்கை வகுப்புக் குறித்த தெளிவான ஒரு அடையாளத்தைக் காண முடிந்தது.**

**அரசுத் தலைவருடனான சந்திப்பின்போது, மோடியின் கடந்த ஆட்சியில் இலங்கையில் இந்திய நிதி உதவியில் தொடங்கப்பட்ட 3 திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன. தொடர்ந்து இரு தலைவர்களுக்கும் இடையில் நடந்த பேச்சில் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து, அதாவது ஏற்கனவே திட்டமிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எரிசக்தி, மின் சக்தி நேரடித் தொடர்புத் திட்டங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.**

**தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில் வழக்கம் போலவே தமிழ்த் தலைவர்கள் தமது மனக்குறைகளை, அரசியல் விருப்பங்களை, தேவைகளை எடுத்து வைத்தார்கள். அவற்றையும் அவர் அமைதியாகச் செவிமடுத்துக்கொண்டார். அவற்–றுக்குத் தீர்வு வழங்குவது குறித்து முன்னேற்றகரமான எந்தக் கருத்தையும் அவர் வெளிப்படுத்தவில்லை.**

**இலங்கையைப்பொறுத்தவரையில்இந்தியாவின் கொள்கைஅடுத்த5வருடங்களுக்கும்அபிவிருத்தி, மேம்பாடு, இருதரப்புஉறவுகளைஇந்தயநலன்களில் இருந்து பலப்படுத்துதல் ஆகியவற்றில் மட்டுமே கவனம்செலுத்தும்என்பதைஇந்தச்சந்திப்புக்களும் உரையாடல்களும் தெளிவுபடுத்தியுள்ளன.**

**அப்படிப்பட்ட நிலையில் தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்தும் இந்தியாவிடம் தமது கோரிக்கைகள், அரசியல் விருப்பங்கள், வேணவாக்கள் என்று கருத்துக்கூறிக் கொண்டிருப்பதால் எதுவும் மாறிவிடப்போவதில்லை. அதிலும் குறிப்பாக மோடியின் 3ஆவது ஆட்சிக் காலத்தில் எதுவும் மாறிவிடப்போவதில்லை. ஆடுகிற மாட்டை ஆடிக் கறப்பது போல இந்தியாவை அதன் போக்கில் அணுகி தமது நலன்களையும் அதில் பூர்த்திசெய்துகொள்வதற்கான வழிமுறைகளை, அணுகுமுறைகளை தமிழ்க் கட்சிகள் புதுப்பிக்காத வரையில் புதுடிலியின் கொழும்பு சார்ந்து மட்டுமான கொள்கை வகுப்பு சிறு மாற்றங்களுக்குக்கூட உட்படாது என்பதைப் புரிந்துகொள்ளலாம். கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவைப்படாதுதானே!**

# உரிமையும் கடமையும்

**என். சத்திய மூர்த்தி**

இனப்பிரச்சினை, அதிலும் குறிப்பாக இனப்போர் தொடங்கிய காலம் தொட்டு, பகடியாக ஒரு வசனம் சொல்வார்கள். அதாவது, உள்நாட்டைவிட வெளிநாடுகளில்தான், இலங்கை தமிழ் மக்களின் குழந்தைகள் அதிக அளவில் பிறக்கிறார்கள் என்று. உள்நாட்டில், அதேசமயம், அதிக எண்ணிக்கையில், தமிழ் இளைஞர்களும் இளம் பெண்களும், முதலில் போராளி குழுக்களின் அங்கமாகவும் பின்னர் இனப்போரிலும் இறந்து வந்தார்கள்.

இன்று, இத்தகைய இழப்புகள் இல்லை என்றாலும், பிறப்பு சதவீதம் என்னவோ, ஒட்டு மொத்தநாடுமுழுவதிலும்குறைந்துவருகிறதுஎன்று ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. அதேசமயம், இறப்பு சதவீதம் மட்டும் கூடி வருவதாகவும் அந்த ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இந்த கணக்கின்படி, எதிர்காலத்தில் எப்போதோ, நாட்டில் மக்கள்தொகை குறைவதன் மூலம் பொருளாதார சீரழிவும் ஏற்படலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. காரணம், ஒரு கட்டத்திற்குப் பிறகு, கடுமையாக வேலை செய்யும் வயதினரைவிட முதியோரே அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள். அவர்கள், பொருளாதார ரீதியாக சம்பாதிக்க முடியாத நிலையில் அவர்களுடைய பிள்ளைகளோ, அரசோதான் அவர்களுக்கான செலவினங்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் வகை செய்யவேண்டும்.

அதிலும் குறிப்பாக, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பின்னர், தென்னிலங்கையில் இருந்தும்கூட ஏராளமான மக்கள், வேலை தேடி வெளிநாடுகளுக்கு சென்று, அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட முயற்சி செய்கிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கு, தமிழர்களிடையே, இந்த பழக்கம் தொத்து வியாதியாக, இனப்பிரச்சினை மற்றும் இனப்போரை காரணம் காட்டி, எப்போதோ தொடங்கிவிட்டது. இப்போதும் தொடருகிறது.

### சொல்லாத காரணி

இந்த ஆய்வுகள் கூறாத, அல்லது கணக்கில் எடுத்துக்கொள்ளாத காரணி ஒன்று உள்ளது. தமிழர் பகுதிகளை பொறுத்தவரையில், சுமார் முப்பது ஆண்டுகாலம், திருமணம்செய்துகொண்டு பிள்ளைகுட்டிகளுடன் வாழ்ந்திருக்க வேண்டிய இளைஞர்களும் யுவதிகளும் இனப்போரில் தொடர்ந்து உயிர் இழந்து வந்தார்கள்.

இனப்போரின் காரணமாக இறந்த தமிழ் இளைய சமுதாயத்தின் எண்ணிக்கையை பல்வேறு தரப்பினர் பல்வேறு வகையில் கணக்கிட்டு கூறி வருகின்றனர். ஆனால், ஒரு பெரும்எண்ணிக்கையினர் இறந்தார்கள் என்பதை யாருமே சந்தேகிக்கவில்லை என்பதே சத்தியம்.

இதுவே தென் இலங்கைக்கும் பொருந்தும், எழுபதுகளின் தொடக்கம் மற்றும் எண்பதுகளின் கடைசி பகுதியில் ஜேவிபி அமைப்பின் இரண்டு ஆயுத கிளர்ச்சிகளின் போதும் பல்லாயிரகணக்கான சிங்கள இளைஞர்களும் இளம் பெண்களும் உயிர் இழந்தார்கள் என்பதும் சம கால வரலாறு.

இந்த இரண்டு சம்பவங்களின் நீள–அகலங்கள் குறித்து விவாதிப்பதல்ல நோக்கம். மாறாக, இனப்போர் மற்றும் ஜேவிபி-ன் கிளர்ச்சிகள் காரணமாக அன்று பல்லாயிர கணக்கில் இருபால் இளைஞர்கள் உயிரிழந்ததன் காரணமாகவும், அடுத்தடுத்த தலைமுறைகளில் நாட்டின் மக்கள்தொகை பெருக்கம் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகிறது. இது குறித்த ஆய்வுகள் நடத்தப்பட்டால், அதன் காரண-காரணிகள் விலாவரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். என்றாலும், இது குறித்த தரவுகள் தெளிவுபடுத்தப்படமாட்டா என்று எதிர்பார்க்கலாம்.

அந்த விதத்தில், இனப்போருக்கு பிந்தைய 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஓராண்டு பிற்போடப்பட்டாலும், அதன் முழு விவரங்களும்இன்றுவரைவெளியிடப்படவில்லை. அதன் காரணம், நாட்டில் முஸ்லீம் மக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருந்தது என்று வதந்திகள் தெரிவித்தாலும், யாருமே இதுவரை இது குறித்து கேள்வி எழுப்பவில்லை. அக்கறை காட்டவில்லை

பொதுவான இந்தப் பின்னணியில், புதியதொரு ஆய்வின் முடிவு, குறிப்பாக வடமாகாண தமிழ் மக்களை கவலை அடைய செய்யும் விதமாக அமைந்துள்ளது. நாட்டின் வட பகுதியில் உள்ள அரசின் சிறார் விடுதிகளில் வளர்க்கப்படும் தமிழ் குழந்தைகளில் சுமார் ஐந்தில் ஒரு பகுதியினர் மன அழுத்த நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி, மிகவும் கவலை அடைய செய்யும் விடயமாகும். அதிலும் குறிப்பாக, இந்த செய்தி அரசின் மக்கள்தொகை கணக்கெடுப்பு திணைக்களத்தின் ஆய்வு அறிக்கையிலேயே இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது விடயத்தில், அரசின் உயர் மருத்துவ அதிகாரி ஒருவரின் கருத்து அந்தக் கவலையை இரட்டிப்பாக்குகிறது. அவரது கூற்றின்படி, அரசு நிறுவனங்களில் நிலைமை இதுவென்றால், உண்மை நிலைமை இதைவிட படுமோசமாக இருக்கும் என்பதுதான். இந்த ஆய்வு அறிக்கையின்படி, அரசு சார்ந்த விடுதிகளில் தங்கவைக் கப்பட்டுள்ள சிறார்களில் பலரும், இதயம் மற்றும் நுரையீரல் சம்மந்தமான வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய மன அழுத்த நோய்கள்தான், பொது வெளியில், குடும்பங்களினுள்ளே சண்டை சச்சரவுகள், வன்முறை மற்றும் தற்கொலைகளாக உருவெடுத்துள்ளன, என்றும் அந்த மருத்துவ அதிகாரி கருத்துத் தெரிவித்தள்ளார். இவை அனைத்திற்கும் முக்கிய காரணி, இனப்போர் காலத்திய துன்பங்கள்தான் என்றும் கூறப்படுகிறது. ஆனால், அன்று தொடங்கி இன்றுவரை, அரசோ, அரசு சாரா நிறுவனங்களோ, இவர்களுடைய விடயத்தில் அதிகமாக அக்கறை காட்டவில்லை என்பதே உண்மை.

### புனர்வாழ்வு மையங்கள்

இது இவ்வாறு என்றால், சில மாதங்களுக்கு முன்னர்,யாழ்பாணத்தில்பள்ளிமாணவர்களிடையே போதைபொருள் பாவனை அதிகமாகி உள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து தெரிவித்து வந்தன. அதிலும் குறிப்பாக, அந்தச் செய்திகள், அரசு அதிகாரிகளை மேற்கோள் காட்டியே அந்த விடயங்களைப் பதிவு செய்திருந்தன.

அதிலும் குறிப்பாக, மாவட்டத்தில், புதிது புதிதாக, போதைபொருள் புனர்வாழ்வு மையங்கள் தொடக் கப்பட இருப்பதாகவும் அந்தச்செய்திகள் தெரிவித்தன. காரணம், அப்போதிருந்த மையங்களில் அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளுக்கும் மேலாக அதிக எண்ணிக்கையில் நோயாளிகளை பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை உருவானதுதான்.

குறிப்பாக, உடலைவிட மனரீதியாக நேரடியாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய புனர்வாழ்வு மையங்களில், அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் சேர்க்கப்பட்டால், எந்த ஒரு நோயாளிக்கும் பயன் கிடைக்காது. இதன் கருப்பொருள் என்னவென்றால், யாழ்பாணத்தில், தமிழ் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இடையே, போதை பழக்கம் அதிக அளவில் பரவி உள்ளது என்பது தான்.

இந்த விடயத்திலும் தமிழர்கள் தனிமைப்படுத் தப்படவில்லை. கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கை பகுதிகளிலும் போதைபழக்கம் மாணவர்களிடையே அதீதமாக பரவி உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு அமைப்புகள் கூறி வந்துள்ளன. அதிலும் குறிப்பாக, கொரோன தொடங்கி, அரகலயா போராட்டத்தின் காரணியான பொருளாதார சிக்கல்களை தொடர்ந்து, சமூக சீரழிவுகள் தென்னிலங்கையில் பலதரப்பு மக்களையும், குறிப்பாக இளைஞர்களையும் யுவதிகளையும் பாதித்திருக்கிறது என்று ஐநா அமைப்புகளின் ஆய்வு அறிக்கைகள் கடந்த ஆண்டு தெரிவித்தது.

### அரசியல் மட்டுமே

அந்த விதத்தில், எனக்கு ஒரு கண் போனால், அவனுக்கு இரண்டு கண்களும் போயிற்று என்று தமிழர்களில் ஒரு தரப்பினர் வேண்டுமானால் கொண்டாடலாம். ஆனால், தங்களில் ஒவ்வொரு இளைஞர் மற்றும் சிறார் சீரழிவில் இருந்து விடுபட வேண்டும், விடுவிக்கப்பட வேண்டும் என்று, உரிமை மட்டுமே பேசும் தமிழ் சமூகத்தில் யாருமே கருதினார்கள் என்று தெரியவில்லை. அந்த உரிமைகளையும் மீறிய கடமைகள், ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு என்பது ஏனோ, யாருக்கும் உறைக்கவில்லை.

இந்த விடயத்தில், சாதாரண குடும்பஸ்தர்களும் சரி, ஆசிரியர்கள் உள்ளிட்ட சமூகக் காவலர்களும் சரி, அவர்களுக்கு அப்பால், தமிழ் சமூக அமைப்புகளும் சரி, ஏன், சிவில் சமூகம் என்று கூறிக்கொண்டு அரசியல் முறைமைகளை மட்டுமே முன்னெடுக்க துடிக்கும் அமைப்புகளும் சரி, எந்தவொரு விதத்திலும் அச்சமோ கவலையோ அடைந்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம், அவர்களுக்கு பிடித்ததெல்லாம், அரசியல் மட்டுமே.

நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தமிழர் உரிமை குறித்து வாய்கிழிய பேசும் எந்தவொரு தமிழ் உறுப்பினரும், இது போன்ற சமுதாய பிரச்சினைகள் குறித்து ஒரு முறைகூட குரல் எழுப்பியதாக தெரியவில்லை. அவர்களை பொறுத்தவரையில் இதுவெல்லாம் பிரச்சினைகளே அல்ல.

மாறாக, 'நான் பெரியவனா, நீ பெரியவனா,' என்ற தலைகன அரசியலை மட்டுமே அவர்கள் அறிவார்கள். இதுதானே, தமிழ் சமூகத்தையும் தமிழர் அரசியலையும் கடந்த ஏழு தசாப்தங்களாக ஆட்டிப்படைத்து வந்துள்ளது? அந்த விதத்தில் தற்போது அவர்களுடைய தலைப்பு, 'ஜனாதிபதி தேர்தலில் பொது தமிழ் வேட்பாளர்' என்பதே. அதற்கு அப்பால், யார் குடி எப்படி கெட்டால் என்ன?

காலைக்கதிர்
Kalaikkathir

## மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு சமாதான நீதிவான் நியமனங்கள்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு புதன்கிழமை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரனின் வழிகாட்டலுக்கு அமைய மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எம். அன்பாஸ் ஒருங்கிணைப்பில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மத்தியஸ்த சபை உறுப்பினர்களாக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றும் உறுப்பினர்களை அவர்களது நன்னடத்தை மற்றும் சமூக சேவை போன்றவற்றை அவர்களை சமாதான நீதிவாங்களாக உள்வாங்கும் நீதி அமைச்சின் திட்டத்திற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களுக்கு இதன் போது அகில இலங்கை சமாதான நீதிவான் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன

நிர்வாக உத்தியோகத்தர் சமுர்த்தி தலைமைப் பட முகாமையாளர் எஸ். சிவா கிராம நிர்வாகிகள் இந்திரஜித் உட்பட திணைக்கிழார் பிரிவு சிரச முகாமைத்து உத்தியோகத்தர்கள் நாவிதர் வழி மத்திய அரச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(05)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக முஷாரப் பிரேரணை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

2005 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் சமர்ப்பித்திருந்தார்.

குறித்த பிரேரணையில் -

2005 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள் இதுவரை எந்த பதவியுயர்வுகளும் இன்றி தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அபிவிருத்தி துறையில் 20 வருட அனுபவமும் தேர்ச்சியும் பெற்றிருக்கின்ற குறித்த உத்தியோகத்தர்களை, விசேட பரீட்சை ஒன்றின் மூலம் திட்டமிடல் சேவைக்குள் உள்வாங்குமாறும், இந்த உத்தியோகத்தர்களுக்கு முதலாம் தரத்திற்கு மேல் தொடர்ந்து பதவியுயர்வுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரை முஷாரப் எம்.பி கோரியிருக்கிறார்.

இதற்கு முன்னரும் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் வெளவேறான மூன்று சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகளை சமர்ப்பித்திருக்கிறார்.

1985 இற்கு முன்னார் விவசாய நிலங்களாக இருந்து போர்காலத்தில் கைவிடப்பட்ட காணிகளை வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களங்கள் அபகரித்து வைத்துள்ளன. இவ்வாறு காணிகளை இழந்த விவசாயிகளுக்கு, ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் குறித்த காணிகளை விவசாயச் செய்கைக்காக விடுவித்து வழங்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தனது முதலாவது சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சில மாதங்ளுக்கு முன்னர் சமர்ப்பித்திருந்தார்.

அப்பிரேரணையின் பலனாக கிழக்கு மாகணத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளை, விடுவிப்புச் செய்யப் படுவதற்கான பணிகள் தற்போது அதன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. அவை இன்னும் சில வாரங்களில் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றன.

அதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் கரும்புச் செய்கைக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான மாற்று நிலம் அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப்படாமை, தொடர்ச்சியாக கரும்புச் செய்கை நட்டத்தில் இயங்குகின்றமை, மாற்று பயிர்செய்கைக்கு மாறுவதற்கு கம்பனி அனுமதிக்காமை உள்ளிட்ட பல விடயங்களை மையப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தனது இரண்டாவது ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்தார். அதன் பலனாக கரும்புச் செய்கையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கும் நடவடிக்கைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மூன்றாவது பிரேரணையாக, யுத்த காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய பகுதிகளில் சிவில் பாதுகாப்பு பிரிவின் கீழ் ஆசிரியப் பணிக்காக இணைக்கப்பட்டவர்கள், 15-20 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியர்களாக பணியாற்றி



வருகின்ற போதிலும் அவர்களின் நியமனம் இதுவரை கல்வயமைச்சின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

இதனைச் சுட்டிக்காட்டி அவர்களை கல்வியமைச்சின்கீழ் ஆசிரியர்களாக நியமிக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார். அப்பிரேரணை இப்போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. வெகுவிரைவில் அவ் உத்தியோகத்தர்கள், கல்வியமைச்சின் கீழ் ஆசிரியர்களாக நியமனம் பெற உள்ளார்கள்.

2020 இல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்ட கிழக்குமாகாண எம்பிக்களுள் முஷாரப் எம்பி தவிர்ந்த வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் இதுவரை எந்தவொரு சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையும் இந்த நான்கைந்து வருடங்களுக்கும் சமரப்பிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது.

நாடாளுமன்றில் ஆற்றப்படும் உரைகள் மக்களைக் கவருமே தவிர, அவை மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கொண்டு சேர்க்காது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள் மற்றும் அமைச்சுசார் ஆலோசணைக்கு கூட்டங்களில் சமர்ப்பிக்கடும் விடயங்களே அமைச்சுக்கள், திணைகளால் கவனத்தில் எடுக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நகர்கின்றன.

நாடாளுமன்றில் உபயோகமின்றி கவர்ச்சிக்காக பேசுவதைக் குறைத்துவிட்டு சபை ஒத்திவைப்பு வேளைகள் மற்றும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் என எதனையும் விரயம் செய்துவிடாது, தனது நாடாளுமன்ற பதவிக்காலத்தினை மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டடையும் பயன்மிகு தருணங்களாக உபயோகித்து வரும் சுறுசுறுப்பான ஒரு திறன்மிகு நாடாளுமன்ற உறுப்பினராக இயங்கிவரும் முஷாரப் எம்பி அவர்களின் ஒப்பற்ற பணி மகத்தானது என சமூக ஆர்வலர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# தமிழர் பண்பாடு





தமிழரின் பண்பாடுகள் அனைத்தும் மிக சிறப்பு வாய்ந்தவையே. தமிழர்களுடைய சிறப்புகளை பற்றி கூறினால் அது எண்ணிலடங்காதது. தமிழர்கள் என்றாலே அனைத்து இடங்களிலும் மதிப்பும் மரியாதையும் இன்றும் அதிகளவு உள்ளன.

பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்களும் சங்க இலக்கிய நூல்கள் என்று அனைவராலும் போற்றப்படுகிறது. சங்க இலக்கியம் என்ற தொகுப்பில் இருக்கும் பாடல்களின் காலம் கி.மு.500 முதல் கி.பி.100 வரை என்று கூறுவர். சங்க இலக்கியங்களை முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் நாட்டில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன. மதுரை, கபாடபுரத்தில் முதல் இரண்டு சங்கங்களும் தோன்றி மறைந்த பின், பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் மூன்றாம் தமிழ்ச் சங்கம் நடந்தது. அத்தகைய மூன்றாம் தமிழ்ச் சங்க நூல்களே எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் ஆகும்.

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் காதலையும், வீரத்தினையும்தன்னுடையை இரண்டு கண்களாக பார்த்து வந்தனர். அந்த இரண்டினையும்தான் அகம், புறம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. அகத்திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைஎனஅன்பின்ஐந்திணைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. புறத்திணைகள் வெட்சி. கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண்போன்றவைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களிடம் எப்போதும் இருப்பது மற்றவர்கள் செய்த நன்றியை மறக்காமல் இருப்பது தான். தமிழ்நாட்டில் நன்றி மறந்த தமிழர்களை பார்ப்பது அரிது.

வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நன்கு உபசரித்து அனுப்புவது தமிழரின் பண்பாடு என்பது அனைவரும் அறிந்த ஒன்று. வீடு தேடி பசி என்று வருபவர்களுக்கு இல்லை என்று கூறாமல் உடனே உணவளிக்கும் பழக்கத்தினை கொண்டவர்கள் தான் தமிழர்கள்.

தமிழரின் இலக்கியம், கல்வெட்டுக்கள், தொல்பொருள் அகழ்வாராய்வுகள், அவர்கள் பயன்படுத்தி வந்த பல்வகைப் மட்பாண்டங்கள், செங்கல் கட்டமைப்புகள், பண்டைய எழுத்து முறை, அகழ்ந்தெடுக்கப்பட்ட செயற்கைப் பொருட்கள், குகைகள் மற்றும் மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்து வடிவங்கள், ஆற்றுப்படுகைகளில் கிடைத்த நாணயங்கள், அரசர்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள், ஆகியன சங்க கால மக்களின் வாழ்க்கை ஒழுக்கத்தினை அறிய உதவும் சான்றுகளாக இருந்தன. தமிழரின் சிறப்புகளை பற்றி கூறினோம் என்றால் அதை அடுக்கிக்கொண்டே போகலாம். தமிழ் மொழிக்கு எவ்வளவு புகழ் உள்ளதோ அதுபோன்று தமிழரின் பண்பாடுகளுக்கும் அத்தகைய சிறப்புகளும், புகழும் நிலைத்து இருக்கிறது.

**தெய்வேந்திரம் வஜிதா**



## 'உறுமய'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிகச் செயலாளர் சந்திரா ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்,

உறுமய திட்டத்தின் கீழ் பெருமளவான காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில் நடமாடும் சேவையொன்றையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாதம் 26 - 30 திகதி வரையில் இந்த நடமாடும் சேவை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போதுகாணிஉறுதிகளை மக்களுக்கு வழங்குதற்காக சகல அதிகாரிகளும் நடமாடும் சேவையில் பங்கெடுப்பர். உறுதியை பெற்றுக்கொள்ள வருவோர் அவர்களின் பழைய உறுதிகள் அல்லது அனுமதி பத்திரங்களை அதிகாரிகளிடத்தில் ஒப்படைப்பதை மாத்திரமே செய்ய வேண்டும். ஏனைய அளவையியல் பணிகள், பதிவுச் செயற்பாடுகள் என்பவற்றை அதிகாரிகள் முன்னெடுப்பர். இந்த சேவையுடன் பதிவாளர் திணைக்களம், அளவையியல் திணைக்களம், பிரதேசசெயலகம், மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்துகொள்வர். இதற்காகசிறிதும் பணம் அறவிடப்படாது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மகாவலி வலயத்திற்குள் வசிக்கும்280,000அதிகமானோர் காணி அனுமதிப் பத்திரங்களை கொண்டுள்ளனர். மகாவலி வலயத்திற்குள் வசிப்போரின் காணிகளுக்கான நிரந்தர உறுதிகள், உறுமய திட்டத்தின் கீழ் வழங்கப்படும். தற்போதும் 60 ஆயிரம் பேருக்கான காணி உறுதிகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றார் நீர்ப்பாசனஅமைச்சின்செயலாளர் சமன் படிகோரல,

காணிஆணையாளர்நாயகம் பந்துலசமரசிங்கதெரிவித்ததாவது:

உறுமய காணி உறுதி வழங்கும்திட்டத்தில்முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிராம மக்களுக்கு இது குறித்த தகவல் உரிய வகையில் சென்றடையவில்லை. சிலர் தமது அனுமதிப் பத்திரங்களை வீடுகளுக்குள் வைத்துக்கொண்டிருப்பதால் நிரந்தரஉறுதியைபெறுவதற்கான வாய்ப்பை இழக்கிறார்கள்.

அதனால் தமது பிரதேச செயலாளரிடம் காணி அனுமதிப் பத்திரங்களை கையளித்து மிக விரைவில் எவ்வித நிபந்தனைகளும் இன்றி காணி உறுதிகளைபெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

அந்தப் பணிகளை செயற்திறனுடன் முன்னெடுக்கும் நோக்கில் ஜனாதிபதி அலுவலகம், காணி ஆணையாளர் திணைக்களம், மகாவலி அதிகார சபை, அளவையியல் திணைக்களம், பதிவாளர் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து அனைத்து பிரதேச சபை மற்றும் கிராம சேவகர்பிரிவுகளில்இந்தநடமாடும் சேவையை நடத்தவுள்ளது.

அதற்காக பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கிராமங்களுக்கு வருகை தருவர். அதன்போது காணி அனுமதிப் பத்திரங்களை கையளித்து ரசீது ஒன்றை பெற்றுக்கொள்ளவேண்டும். மேலும், உறுமய திட்டத்தின் கீழ் காணிகளுக்கான உறுதிகளை விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## 3 அபிவிருத்தித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரினால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்தியவீடமைப்புத்திட்டத்தின் கீழ்கண்டி, நுவரெலியா, மாத்தளை பிரதேசங்களில் அமைக்கப்பட்ட 106 வீடுகளின் டிஜிட்டல் பெயர் பலகையும்ஜனாதிபதியும், இந்திய வெளிவிவகாரஅமைச்சரும்திறந்து வைத்தனர்.

கொழும்பு - திருகோண மலையின் இரண்டு மாதிரிக் கிராமங்களில்அமைக்கப்பட்டதலா 24வீடுகளைஜனாதிபதியும், இந்திய வெளிவிவகாரஅமைச்சரும்மக்கள் பாவனைக்காக கையளித்தனர்.

இந்தியாவின் 06 மில்லியன் நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையில் சமுத்திர மீட்பு தொடர்பாடல்மையமும்ஜனாதிபதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கொழும்பில் உள்ள கடற்படைத்தலைமையகத்தில்ஒரு மையம், அம்பாந்தோட்டையில் துணை மையம், காலி, அருகம்பே, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்லாறு, பருத்தித்துறை, மொல்லிக்குளம் ஆகிய பிரதேசங்களின் ஆளில்லா கட்டுப்பாட்டு மையங்களும் அடங்கும்.

வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இந்தியஉயர்ஸ்தானிகள்சந்தோஷ் ஜா உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதற்கான அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் விடுத்துள்ள அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாதிராசா ஆகியோர் பங்கேற்றிருந்தனர். சம்பந்தன் பங்கேற்பதாக இருந்தபோதும் இறுதி நேரத்தில் அவரது உடல்நிலைஒத்துழைக்காமையால் பங்கேற்கவில்லை.

நேற்றைய சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் தெரிவித்ததாவது:

நாட்டின் அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு விடயங்களை அமுலாக்குவதற்கு தக்க தருணம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த தேர்தலில் போட்டியிட்டால் அவருடன் போட்டிபோடவுள்ள எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் அரசமைப்பில் உள்ள விடயங்களை முழுமையாக அமுலாக்குவதற்கு தயார் என்று எம்முடன் நடத்திய சந்திப்பில் கூறியுள்ளனர். குறிப்பாக, 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தயாராகவுள்ளனர். அதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை முன்னெடுக்கின்றபோது அவர்கள்எதிர்க்கமாட்டார்கள். ஆகவே இதுவொரு நல்ல தருணமாகும் என்பதை எடுத்துரைத்துள்ளோம் என்றார்.

தமிழ்பொதுவேட்பாளர்குறித்துக் கருத்து வெளியிட்ட சுமந்திரன், குறித்த விடயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. என்னைப்பொறுத்தவரையில் நான் இதனை ஆதரிக்கவில்லை. ஏனென்றால் நடைமுறை ரீதியாக இது சாத்தியப்படாதவொரு விடயம் என்பதைத் தெரிவித்தேன் என்றார்.

''அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டத்தினை அமுலாக்குவதாகக் கூறினாலும் நடைமுறையில் எதனையுமே செய்யதவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஆகவேதான் தமிழ் மக்களின் அபிலாஷைகளை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குதீர்மானித்துள்ளோம் என்று அவரிடத்தில் கூறியுள்ளோம்" என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்..

தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக எடுத்துரைத்ததுடன், சிங்கள அரசு ஒருபோதும் ஒற்றையாட்சிக்குள் வழங்கும் எந்தத் தீர்வினையும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளோம். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலினை புறக்கணிக்கும் முடிவினையே எடுத்துள்ளோம். அதுபற்றிய விரிவான அறிக்கையை நாம் வெளியிட்டுள்ளோம். மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஊடாக சிறப்பு அறிக்கையாளர்ஒருவரைநியமித்து இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையை ஆராய்ந்து அறிக்கையிட வேண்டும். அதற்கு இந்தியா முனைப்பாகச் செயற்பட வேண்டும். மேலும் இந்திய இழுவைப்படகுகளால் எமது மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைதடுத்துநிறுத்துவதற்கும் நடவடிக்கைகள்எடுக்கப்படவேண்டும் என்றெல்லாம் வலியுறுத்தினோம் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பது அரசியல் ரீதியாக கையாளப்பட வேண்டியதொரு விடயம். அதன் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருதச்சட்டம் என்பது சட்டரீதியாக கையாளப்பட வேண்டிய விடயமாகும். இவை இரண்டும் சமாந்தரமாக முன்னகர்த்தப்பட வேண்டிய விடயங்களாகும். எனினும், தற்போது மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று மூவாயிரம் மில்லியன் டொலர் முதலீட்டைக்கொண்டு வருகின்றார். ஆனால் எமது முதலமைச்சர் விக்னேஸ்வரனால் முதலமைச்சர் நிதியத்தினைக்கூட முன்னெடுக்கமுடிந்திருக்கவில்லை. நிதி அதிகாரத்தினைக்கூட அவர்கள் வழங்காதநிலையில்காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவார்கள் என்றுஎதிர்பார்க்கமுடியாது. ஆகவே, இந்த விடயங்கள் சம்பந்தமாக நாம் டில்லிக்கு விஜயம் செய்து தங்களின் கீழுள்ள சவுத்பிளக் இல் உரையாடல்களைச் செய்வதற்கு தயாராக இருக்கின்றோம். அதற்கானசந்தர்ப்பத்தினைதாங்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டோம் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

இதேவேளை, தமிழ் மக்களை தொடர்ச்சியாக தென்னிலங்கைத் தலைவர்கள் ஏமாற்றிவருவதன் காரணத்தினால்தான் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான கருத்துவருவாக்கும் தீவிரமடைந்துள்ளது. சிவில் அமைப்புக்களும், மதத் தலைவர்களும் முன்னெடுக்கும் இந்த விடயத்திற்கு சில அரசியல் கட்சிகளும், ஆதரவுவழங்கியுள்ளன. நான் எனது முழுமையான ஆதரவினை வழங்குகின்றேன் என்பதையும் தெரிவித்தேன்.




காலைக்கதிர் Kalaikkathir

# பாதிக்கப்பட்ட மாணவனுக்கு நீதி வேண்டும் எனக் கோரி கப்பல்துறை சரஸ்வதி வித்திக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்







(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் செல்வன் ரமேஷ் இத்திக்க உதார எனும் மாணவன் கடந்த 14 ஆம் திகதி பாடசாலையில் மாலை நேர வகுப்பு முடிவடைத்து வீட்டுக்குச் செல்லும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அந்த மாணவனை தாக்கியுள்ளனர்.

இச் சம்பவத்திற்கு நீதி கோரி புதன்கிழமை காலை அப்பகுதி மக்களும் மாணவர்களும் பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம்இடம்பெற்றஇடத்திற்குதிருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளரும், பொலிஸாரும் வருகைதத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாவடிப்பள்ளியில் கீறல் இதழ் வெளியீடும் கலந்துரையாடலும்





(எம் எப் நவாஸ்)

கீறல் இதழ் வெளியீடும் கலந்துரையாடலும் அண்மையில் மாவடிப்பள்ளி (சம்மாந்துறை) அஸ்ரஃப்ம.வியில்திறந்தவெளியில் ரம்மியமானசூழலில்மிகச்சிறப்பாக நடைபெற்றது.

உலகக் கவிஞர் சோலைக்கிளி அவர்கள் முதன்மைப் பிரதியை அஸிஸ்எம்பாயிஸிடமிருந்துபெற்றுக் கொண்டதோடுபேராசிரியர்எஸ்.எம். அய்யூப், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.எல். அப்துல்அஸீஸ், சிறிலங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் அக்கரைப்பற்றுக்கிளைமுகாமையாளர் எஸ்.எல். அன்வர், அஷ்ஷெய்க் நிலாம் (நளீமி), அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி), விவசாயப் போதனாசிரியர் கவிஞர் முர்ஷிதா ஷிரீன், கவிஞர் ஜமீல், கவிஞர் முனாஸ், கவிஞர்பானு ஜிஃப்ரி, புத்தக வடிவமைப்பாளர் ஸாஜித் அலி, எம்.எல்.ரீ. அலுவலர் சகோதரர் ஸாகீர், முதுமானி எம்.எல் இஸ்ஹாக்ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

கீறல் கலை இலக்கிய சஞ்சிகைக்கு பரந்துபட்ட வாசகர் வட்டம் ஒன்றை தோற்றுவிப்பது தொடர்பாக விரிவான கருத்துப் பரிமாறல் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கும் புதிய முகாமைத்துவ பணிப்பாளர்



இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக சுரங்க பிரசாத் ஹிந்தல்ல ஆராச்சி அண்மையில் நியமிக்கப்பட்டார்.

இவருக்கான நியமனக் கடிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அண்மையில் வழங்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகக்கடமையாற்றியதுஷாரலொக்குகுமார அதன் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் இப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் சுரங்க பிரசாத் ஹிந்தல்ல ஆராச்சி தேசிய பெருந்தோட்ட கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் தலைவராகவும், இலங்கை துறைமுக அதிகார சபை பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், பசுமைப் பல்கலைக் கழகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கமையாற்றியுள்ளதுடன் அவர் இலங்கை நிர்வாக சேவையில் சிறந்த அனுபவம் கொண்ட அதிகாரியுமாவார்.

இந் நிகழ்வில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவும் கலந்து கொண்டார்.(05)

# கடற்றொழில் அமைச்சிற்கு புதிய செயலாளர் நியமனம்



கடற்றொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள நிசாந்த விக்கிரமசிங்க புதன்கிழமை தமது அமைச்சில் வைத்து கடமைகளை பொறுப்பேற்றார்.

இவருக்கான நியமனக் கடிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கப்பட்டது. முன்னாள் செயலாளர் செல்வி நயனாகுமாரி சோமரத்ன ஓய்வு பெற்றதை தொடர்ந்து ஏற்பட் டுள்ள வெற்றிடத்திற்கே அவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

அவர் ஏற்கனவே கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றியுள்ளதுடன் தெஹியோவிட்ட மற்றும் பசறை பிரதேச சபைகளில் உதவி பிரதேச செயலாளரகவும், பதுளை மாவட்ட சமுர்த்தி ஆணையாளராகவும், ஊவாபரணகம பிதேச சபையின் செயலாளராகவும், ஊவா மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளராகவும், அம் மாகாண சபையின் ஆணையாளராகவும் தெங்கு,அபிவிருத்திஅதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாகவும், இரத்தினக்கல்மற்றும்தங்கஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாகவும், காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும்பணியாற்றியுள்ளார்.

ஜயர்தனபுர பல்கலைக் கழகத் தின் வர்த்தகப் பிரிவின் விசேட பட்டதாரியான இவர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் எம்.ஏ. பட்டதாரியுமாவர்.

சர்வ மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர்களான அனுஷாகோகுல (மனித வள அபிவிருத்தி), அப்சரா நிசங்க( நிர்வாகம்), பணிப்பாளர் (நாயகம் தொழில்நுடபம்) தம்மிக்க ரணதுங்க, கடற்றொழில் திணைக்களத்தின்பணிப்பாளர்நாயகம் சுசந்தகஹவத்த, நாராநிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கே. அருளானந்தன் உள்ளிட்ட அதிகாரிகள்கலந்துகொண்டனர்.(05)

# சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு பணியகங்கள் அம்பாறையில் திறப்பு

(பாறுக் ஷிஹான்)

சிறுவர் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், நிந்தவூர், மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமைதடுப்பு பணியகம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது நிந்தவூர் இறக்காமம் பொலிஸ் நிலையங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு பணியகங்கள் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கலாநிதி சட்டத்தரணி அஜித் ரோகண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நாடுமுழுவதும்உருவாக்கப்பட்டபுதியபொலிஸ்நிலையங்களில் அரசாங்கத்தின் விசேட திட்டத்தின் கீழ் அம்பாறைமாவட்டத்தில் உள்ள 3 பொலிஸ்நிலையங்களில் இப்பணியகங்கள் அமைக்கப்பட் டுள்ளன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் , உட்பட சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் பொலிஸ் சேவையில் நீண்ட கால அனுபவம் கொண்டவரும் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகருமான எஸ்.எல்.சம்சுதீனின் நன்றியுரையுடன் குறித்த நிகழ்வகள் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிண்ணியா முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தின் ஹறஜ் தின கவியரங்கு நிகழ்வு




(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ஹஜ் தின கவியரங்கு இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில் கிண்ணியா அல் எகுத்தார் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இலக்கிய வட்டத்தின் தலைவர் பி.ரீ.அஸீஸின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அம்.கவிமணி கௌரிதாசன் அறிமுகத்தினையும், கலைஞர் அக்பர் சலீம் வரவேற்புரையையும், கவிஞர் ஏ.எம்.கஸ்புள்ளா ஏற்புரையையும், எழுத்தாளர் எம்.எஸ்.எம்.நியாஸ் தொகுப்புரையையும் வழங்குவர்.

எழுத்தாளர் ஐ.ஹசன்ஜி, கவிஞர் ஏ.எம்.ஏ.றசூல், எழுத்தாளர் எம்.எச்.ஏ.ஹசன், ஊடகவியலாளர் எம்.ஏ.முகமட், எழுத்தாளர்களான ராகிலா மஜீத்நூன், முகைமினா மூஸா, கிண்ணியா சபீனா மற்றும் ஜெனீரா தௌபீக் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

இந்நிகழ்வுக்கு இலக்கியவாதிகளையும் ஆர்வலர்களையும் ஏற்பாட்டுக்குழு அழைக்கின்றது.(05)

# தோழர் பத்மநாபாவின் தீர்க்க தரிசன சிந்தனை

## தோழர் சலீம் எடுத்துரைப்பு



(சலீம்)

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின்படியான 13 ஆவது அரசமைப்புத்திருத்தம் மூலம் கிடைத்த இணைந்த மாகாண சபையை தோழர் பத்மநாபா தீர்க்கதரிசனமாக ஏற்றுக்கொண்டதுடன் 13 ஆவது திருத்தத்தை நிதர்சனமாக நடைமுறைப்படுத்தவும் முனைப்புடன் செயற்பட்டார். ஆனால் அன்று அதனை தட்டிக்கழித்து உதாசீனம் செய்தவர்கள் இன்று 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்புடையது என்ற நிலைப்பாட்டில், அதற்காக பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற நிலைப்பாட்டிற்கும் வந்துள்ளனர்

இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உதவிப் பொதுச் செயலாளரும், அம்பாறைப் பிராந்திய அரசியல் துறை அமைப்பாளருமான மத்திய குழு உறுப்பினர் தோழர் சலீம் (பிர்தௌஸ்) கூறினார்.

தமிழர் சமூக ஜனநாயக்கட்சியின் (பத்மநாபா - ஈ.பி.ஆர்.எல்.எப்) அனுசரணையுடன், பாண்டிருப்பு 2ஏ அன்புவழிபுரத்திலுள்ள கட்சியின் மாவட்ட தலைமை அலுவலக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற 34 ஆவது தியாகிகள் தின நிகழ்விற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் தியாகி தோழர் கமல நாதனின் (கண்ணன்) சகோதரி டேவிட் ஈஸ்வரி தோழர் பத்ம நாபாவின் திரு உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் மறைந்த தோழர்களுக்கு தியாகச் சுடரேற்றி இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் இலவச தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

உதவிப்பொதுச்செயலாளர் தோழர் சலீம் (பிர்தௌஸ்) தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார் -

இன்று 13 ஆவது அரசமைப்புத்திருத்தம் நாட்டில் பேசுபொருளாக மாறியிருக்கின்றது.

தோழர் பத்மநாபாவின் இது தொடர்பான அன்றைய தீர்க்க தரிசனமான முடிவைத் தட்டிக்கழித்து உதாசீனம் செய்தவர்கள், இந்த தீர்வே ஏற்புடையதென இன்று ஏற்றுக்கொண்டு 13 ஆவது திருத்தத்தைக் கையிலெடுத்துள்ளனர்.

தோழர் பத்மநாபாவும் 13 தோழர்களும் சென்னையில் படுகொலை செய்யப்பட்டனர்.

தனது இறுதி மூச்சு வரை ஈழமக்களின் விடுதலை ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு அதனை அடைவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்பதில் தோழர் பத்மநாபா உறுதியாக நின்றார்.

சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முயன்ற அவர் ஏற்றுக்கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒன்றே



இன்று வரை சர்வதேச ஒப்பந்தமாகத் திகழ்கின்றது.

தோழர் பத்மநாபா கூறியது போன்று 'நாம் மக்களுக்காகவே மண்ணை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும் ஐக்கியம் எனும் தளத்தில் நின்று இறுதி வெற்றிவரை உறுதியுடன் பேராட வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை சாத்வீக முயற்சிகளுடன் வென்றெடுப்போம்.

நாம் எதிர்காலத்தில் அரசியல் நடவடிக்கைகள் தொடர்வதுடன் மக்கள் உரிமைகள் சார்ந்த விடயங்களில் முனைப்புடன் செயற்படுவோம்' என்றார்.

கட்சியின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் தோழர் சசி, நிதிப்பொறுப்பாளர் ரஞ்சித், ஆலோசகர் தோழர் டெவிட் ஆகியோரும் நினைவுரைகளாற்றினர்.(05)

## நில ஆக்கிரமிப்பினால் ஒடுக்கப்படும்

# பாலஸ்தீனர், தமிழர் உரிமைகளை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும்

## சிட்னி நூல் வெளியீட்டில் தனபாலசிங்கம் உரை





இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்தில் பாலஸ்தீன மக்களுக்கு எதிராகவும் நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் நடைபெற்றுள்ளன. ஐங்கரன் விக்கினேஸ்வரா இதனை ஒப்பிட்டு ஆண்டு வரிசையில் தரவுகளுடன் விளக்குகியுள்ளார் என 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூலை அறிமுகம் செய்த சிட்னியின் மூத்த தமிழ் செயற்பாட்டாளர் தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் கடந்த வெள்ளி ஜூன் 7 ஆம் திகதி நடைபெற்றது.

சிட்னியில் நடைபெற்ற இந்நிகழ்வில் மூத்த தமிழ் செயற்பாட்டாளர் தனபாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது பாலஸ்தீன மக்கள் மிகவும் நெருக்கடியான காலத்தில் இனப்படுகொலை ஒன்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். உலக நாடுகள் வெறுமனே கண்டிப்பதுடன் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர். இவ்வாறான ஒரு சூழலில் ஒடுக்கப்படுகின்ற, நிலங்களைப் பறிகொடுத்த, இனப் படுகொலையை எதிர்கொண்ட தமிழ் இனமாக பலஸ்தீன மக்களுடன் உணர்வுத் தோழமையுடன் தோள் கொடுத்து நிற்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உள்ளதை இந்நூலில் அரசியல்-வரலாற்று தகவல்களுடன் ஐங்கரன் விக்கினேஸ்வரா தெளிவாக விளக்குகியுள்ளார் என தனபாலசிங்கம் தெரிவித்தார்.

இந்த நோக்கத்தில் ஐங்கரன் விக்கினேஸ்வரா, பாலஸ்தீன மக்கள் எதிர்நோக்கிய, நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' என்ற நூலானது எங்கள் காலத்தின் இரு தேசிய இனங்களின் வலிகளை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளது.

இந்நூலில் நிகழ்கால பாலஸ்தீன போர்க்கள நிகழ்வுகளின் ஆய்வுக் கட்டுரைகள் பல வெளியாகியுள்ளன.

நூறாண்டுகளாகத் தொடரும் துயரத்தை சுமந்த எரிகின்ற பாலஸ்தீன தேசம் பற்றிய வரலாற்றுப் பார்வையில் கட்டுரைகள் இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இன்று பாலஸ்தீனம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு பல துண்டுகளாக்கப்பட்டு சிதறடிக்கப் பட்டுள்ளது. சர்வதேசமும் இவர்களைக் கைவிட்டுள்ளது. எவ்வாறு நிலங்கள் துண்டாடப் பட்டன, எவ்வாறு ஆக்கிரமிக் கப்பட்டன, மக்கள் மீது எவ்வாறு போர் திணிக்கப்பட்டது. வன்முறைகளும் இடப்பெயர்வுகளும் காலனித்துவ நாடுகளின் சதிகளும் துரோகங்களும் அவர்களின் இரட்டை நிலைப்பாடுகளும், எனப் பலபொதுத்தன்மைகளை இந்நூலில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

ஈழத்து இலக்கிய உலகில் நீண்ட காலம் அறிமுகமான ஐங்கரன் விக்கினேஸ்வரா நீண்ட காலமாக சர்வதேச அரசியல் விவகார ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருபவர்.

ஈழத் தமிழர்கள் பாலஸ்தீன மக்கள் மீதான ஒடுக்குமுறையை புரிந்துகொள்ள பங்களிக்கின்றார். இப் புரிதலானது பாலஸ்தீன மக்களுடன் உணர்வுத் தோழமையுடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான விழிப்புணர்வை ஈழத் தமிழர்களுக்கு இந்நூல் வழங்கும் என நம்புகின்றேன் என தனபாலசிங்கம் தெரிவித்தார்.

இரண்டு தேசத்தவர்களும் தமக்கு ஏற்பட்ட (வரலாற்று) அனுபவங்களிலிருந்து கற்று பரஸ்பரம் பகிர்ந்து ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருந்து செயற்பட வேண்டும். இதற்கு ஆழமான புரிதலும் நீண்ட கால தெளிவான நோக்கமும் இருக்க வேண்டும் என்றும் தனபாலசிங்கம் தெரிவித்தார்.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு கடந்த வாரம் ஜூன் 7 ஆம் திகதி சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றினார். அதன்பின் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர் ஹாரூன் காசிம் ஆற்றினார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் அவர்கள் ஆற்றினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் திருநந்தகுமார் அவர்களும், பாடும் மீன் சிறிஷ்கந்தராஜாவும் சிறப்புரை ஆற்றினர்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெற்ற நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# விடத்தல் தீவு கண்டல் தாவரக் காணி விடுவிப்பு சந்தேகத்தை கிளறுகிறது

## சமூக ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு





வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சர் பவித்ரா தேவிவன்னியாராச்சிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய மன்னார் மாவட்டம் விடத்தல் தீவு இயற்கை சரணாலயம் என குறிப்பிடப்பட்ட பகுதி நிறைவுக்கு வருவதாக கடந்த மே மாதம் 6 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறுவிடத்தல்தீவுபகுதியில்வனவளதிணைக்களத்திற்கு சொந்தமானகாணிகள் கடல்சார்பூங்கா/கடல்வேளண்மைக்கு விடுவிக்கப்படுவதாக வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த காணி விடுவிப்பு தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

குறிப்பாக, கடந்த வாரம் இடம் பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது குறித்த காணி விடுவிக்கப்பட்டமைதொடர்பில்பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில் –

அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கையான கண்டல் காடுகளை அழித்து மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்து அமைக்கப்படும் கடல்சார் பூங்காவிற்கு அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

அதே நேரம் மீனவர்கள் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்ட போது இந்த 400 ஏக்கர் நிலமும் ஒரு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பண்ணை அமைப்பதற்கு வழங்குவதற்காகவே விடுவிக்கப்பட்டதாக சந்தேகம் மீனவர்கள் மத்தியில் காணப்படுவதாகத் தெரிவித்தனர்.

வெறுமனே அதை 400 ஏக்கர் பிரச்சினையாகக் கருதக்கூடாது எனவும் அதைத் தொடர்ந்து விடத்தல் தீவு பகுதியோடு சேர்ந்த 1400 ஏக்கர் காணிகள் ஆபத்தில் இருப்பதாக வடமாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் ஆலம் குறிப்பிட்டிருந்தார்.

அதே நேரம் குறித்த காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பாக தங்களுக்கு எந்த ஓர் அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை எனவும்1000ஏக்கர்காணிகள்விடுவிப்புதொடர்பில்அளவீடுகள் இடம் பெற்ற நிலையில் 400 ஏக்கராக குறைக்கப்பட்டு தற்போது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளதாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார்.

அதே நேரம் மன்னார் மாவட்ட காணிகளுக்கு பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் இது தொடர்பாக தெரிவித்த போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியானதை தொடர்ந்து மன்னார் வனவள திணைக்கள அதிகாரிகளிடமும் கொழும்பு மாவட்ட உயர் அதிகாரிகளிடமும் அறிய முற்பட்ட வேளை குறித்த அறிவித்தல் தொடர்பில் அவர்களுக்கே தெரியாத நிலையே காணப்படுவதாக தெரிவித்தார்.

மேலும் குறித்த வர்த்தமானி அறிவித்தல் சிங்கள மொழியிலே காணப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்ட இணைப்புகள் எதுவும் வர்த்தமானியில் காணப்படவில்லை எனவும் அதில் ஒழுங்கான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவ் வர்த்தமானி தொடர்பில் யாருக்கும் ஒழுங்கான விளக்கம் இல்லை என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த விடுவிக்கப்பட்ட காணிகள் வேறு எந்த உள்ளூர் நிறுவனங்களுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கோ வழங்காது அப்பகுதியை சேர்ந்த மக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இருந்தது.

இந்த நிலையில் புதன்கிழமை யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் 'விடத்தல் தீவு விடுவிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு பயன்படுத்துவதாக கடற்றொழில் அமைச்சால் தெரிவிக்கப்படுகின்றது.

எங்களை பொறுத்த வரையில் விடத்தல் தீவு என்பது கடலால் சூழப்பட்ட பிரதேசம் .அது பூகோள ரீதியில் பெறுமதியான பிரதேசம். பருவ காலத்தில் மீன் இனங்கள் அந்த பிரதேசத்திலேயே இனப்பெருக்கம் செய்து ஆழ்கடலுக்கு செல்கின்றன. இலங்கையின் மிகப்பெரிய மீன் உற்பத்தி வங்கி அதாவது இந்த திணைக்களங்களினால் அறியப்படாத மீன் உற்பத்தி வங்கியும் இதை எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதாக கூறி மிக பலம் பொருந்திய பல்தேசிய கம்பெனிகளுக்கு மக்கள் என்ற போர்வையில் மக்களை பினாமியாக வைத்து விற்பனை செய்வதற்கான மறைமுகமான திட்டமாகத்தான் இது இருப்பதாக அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த காணி விடுவிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அமைச்சாலோ அமைச்சராலோ வழங்கப்படாத நிலையில் குறித்த காணிகளை விடுவிக்க வேண்டாம் எனவும் அவை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கோரி விரைவில் விடத்தல் தீவு மக்களால் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# வாகரையில் நாய்களுக்கு புதிய பராமரிப்பு நிலையம்

## திறந்துவைத்தார் கிழக்கு ஆளுநர்










கைவிடப்பட்ட நாய்களுக்கும் நாய்க்குட்டிகளுக்கும் ஊட்டச்சத்தான உணவுடன் பாதுகாப்பான இருப்பிடம் வழங்கும் நோக்கில்வாகரையில் நாய் பராமரிப்பு நிலையமொன்றை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்துவைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் முதல் திட்டம் இதுவாகும்.(05)

# முல்லைத்தீவு வான் பரப்பில் அதிர்ச்சி ஏற்படுத்திய உருவம்



முல்லைத்தீவு வான் பரப்பில் அதிசய உருவம் இரண்டு செவ்வாய்க்கிழமை தோன்றியிருந்ததையடுத்து மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தற்பொழுது நிலவி வரும் சீரற்ற காலநிலையினையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு வேளை வானில் தொடர்ச்சியாக நீல நிறமாக ஓர் உருவம் ஒளிர்ந்துகொண்டிருக்க அதனை சுற்றி வேறு நிற ஒளி உருவம் விட்டு விட்டு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

இதனை அவதானித்த மக்கள். இயற்கை மாற்றம் ஏற்படுமா என்ற நிலையில் அச்சமடைந்துள்ளனர்.(05)

# யாழில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது



யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டை பொலிஸார் சுற்றி வளைத்த வேளை, 200 லீற்றர் கோடா மற்றும் 06 லீற்றர் சட்டவிரோதமதுபானம் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள்ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் , குறித்த வீட்டில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட அளவெட்டி பகுதியை சேர்ந்த 31 வயதான நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.(05)

# இரு குழுக்கள் இடையே மோதல் : நெடுந்தீவில் ஒருவர் படுகொலை

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் புதன் இரவு இரு குழுக்களுக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு குறித்த சம்பவத்தை தொடர்ந்து இரு குழுக்களுக்கு இடையே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நெடுந்தீவு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவத்தின் போது, 23 வயதுடைய அன்ரன் ஜீவராஜ் அமல்ராஜ் என்பவரே உயிரிழந்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## களைகட்டும் திருமலை பளிங்குக் கடற்கரை







(வி.ரி. சகாதேவராஜா)

திருகோணலை பளிங்கு கடற்கரை (மார்பிள் பீச்) அண்மைக் காலமாக உல்லாச பயணிகளால் களைகட்டி வருகிறது.

கடந்த ஹச் பெருநாள் அன்று ஏகப்பட்ட சுற்றுலா பிரயாணிகள் அங்கே விஜயம் செய்திருந்தனர்.

தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் அங்கு விஜயம் செய்து நீராடி வருகின்றார்கள் .

சமகாலகாலநிலையைகருத்தில் கொண்டு அங்கு தினம் சுற்றுலா பயணிகள் அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.(05)

## யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரிக்கு நிரந்தரப் பீடாதிபதியை நியமிக்குக

### கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம் கல்வி யியற் கல்லூரியில் மாணவர் கள் மிக மோசமாக உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப் பட்டிருப்பதாகவும், உடனடியாக நிரந்தர பீடாதிபதி ஒருவரை நியமிக்குமாறுதமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்செல்வராசாகஜேந்திரன் தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்ப்பாணம் கல்வியற்கல் லூரியில் மாணவர்கள் மிக மோச மானஉளவியல்நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அங்கு கல்விபயிலும் ஆசிரிய மாணவர்கள் தரப்பிலிருந்தும், அவர்களின் பெற்றோர்களின் தரப்பிலிருந்தும் எங்களுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிக்கு ஒரு நிரந்தரமான பீடாதிபதிநியமிக்கப்படாதநிலையில், பதில் பீடாதிபதியின் தலைமை யில் தான் அது இயங்கிக்கொண் டிருக்கிறது. ஏன் கல்வியியற் கல்லூரிக்குஒருநிரந்தரமானபீடாதிபதி நியமிக்கப்படவில்லையென்ற கேள்வி இருக்கின்றது.

ஆகவே அந்த மாணவர்களின் பிரச்சஜனைகளை ஆராய்வதற்கு அவசரமாக குழுவொன்று அமைக் கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சிடம் கேட்டுக்கொள் கின்றேன். அதேநேரத்திலேஉடனடி யாகஒருநிரந்தரபீடாதிபதிஒருவரை அந்த கல்வியியற் கல்லூரிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2024இல் வெளியிடப்பெற்றது